மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

ஸ்ரீரங்கம்

OS.No.1219/2019

**06.03.2026**

**பெயர். ஜெபமாலை ராஜ் த/பெ . பாப்பு (எ) மைக்கேல் (வயது– 82 /2026)**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எனக்கு 82 வயதாகிறது. என்னுடைய தந்தை பெயர் பாப்பு (எ) மைக்கேல் . அவர் என்ன வயதில் காலம் அடைந்தார் என்றால் 89 அல்லது 90 வயது இருக்கும். பாப்பு (எ) மைக்கேல் அப்பா சாமிநாதன் நான் பிறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார் என்றால் சரிதான் . சாமிநாதன் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே காலமாகிவிட்டார். சாமிநாதன் காலமானது எனக்கு தெரியாது. எனது தந்தையார் பாப்பு (எ) மைக்கேல் என்பவருக்கு பூர்வீக சொத்து உள்ளது என்றால் சரிதான் . அந்த சொத்துக்களை நாங்கள் முறையாக பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

2. என்னுடைய தந்தையார் பெயரில் சுமாராக எத்தனை சொத்துக்கள் உள்ளது என்றால் எனக்கு தெரிந்தவரையில் சுமார் 7 ஏக்கர் நிலங்கள் அவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அந்த சொத்துக்கள் தற்போது உள்ளதா என்றால் தற்போது இல்லை. அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நானும் எனது தம்பி அல்போன்ஸ் –ம் வாய்வழியாக ஊர்மக்கம் முன்பு பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான் . அதன் அடிப்படையில் அவரவர் பிரித்துக்கொண்ட சொத்தில் பட்டா ஏற்படுத்தி அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான் . இது இல்லாமல் எனது சகோதரி தெரசம்மாளுக்கு தனிபாகமாக எனது தந்தையார் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான் . என்னுடன் பிறந்த ஆரோக்கியசாமி என்பவர் 1985, 1986 வருடத்தில் இறந்துவிட்டார். ஆரோக்கியசாமி போலீசாக பணிபுரிந்து வந்தார் . ஆரோக்கியசாமி திருமணம் நடந்து 22 நாட்களில் இறந்துவிட்டார். ஆரோக்கயசாமியின் குடும்பத்திற்கு சொத்தில் இருந்த பங்கு பிரிக்கப்பட்டதா என்றால் பிரிக்கப்பட்டது . ஆரோக்கியசாமியின் மனைவி பெயர் விமலா. அவர் புள்ளம்பாடி இலால்குடி தாலூக்கில் விரகாலூரில் வசித்து வருகிறார் . வழக்கில் வாதிகள் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி முதல் விசாரணையில் என்ன தகவல் சொல்லியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் . வாதி எனது சகோதர் அல்போன்ஸ் –ன் மகன் என்றால்

சரிதான்.நானும் எனது சகோதரர் குடும்பமும் ஒரே ஊரில்தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான் . நான் அரசாங்க பணியில் வேலை செய்தேனாஎன்றால் வேளான்மைபல்கலைகழகத்தில் 25 வருடங்களாக தற்காலிக பணியாக கூலி வேலை செய்து ஓய்வு பெற்றேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

**Sd/–xxxx**

Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made is her signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam